Registered as a Newspaper

88 August
II ஆம் பிரிவு
(விஞ்ஞானம்)
ஆரம்பம்:
19-4-86 (காலை 7.30 மணி)
(விடுமுறை நாட்களில் மேலதிக வகுப்புக்கள்)
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

# உதயன்

விலை ரூ 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

7.30 - Physics
திரு. வர்ணம்
8.30 - Chemistry
திரு. இல்லைநாதன்
9.30 - Zoology
திரு நாகநாதன்
10.30 - Botany
திரு. குகாதரன்
9.30 - 11.30-Pure & Appl. Maths
திரு. நல்லையா
விபரங்கட்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு சித்திரை மீ 5 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபா பிறை 8 (18 04-1986) UTHAYAN ■ A LIVELY TAMIL DAILY கதிர்:129




லிபியாவில் அமெரிக்கா நடத்திய தாக்குதலைக் கண்டித்து யாழ்நகரில் நேற்று நடத்தப்பட்ட பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

போராளிகள்-படையினர்

# யாழ். நகரில் நேற்று 2 மணிநேரம் மோதல்

## பொதுமக்கள் ஐவர் காயம்

### பண்ணைக் கடலுக்குள் வான்

— உதயன் அலுவலகச் செய்தியாளர்கள் —

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

யாழ்ப்பாண நகரில் நேற்று வியாழக்கிழமை நண்பகல் போராளிகளும் ஆயுதப்படையினரும் சுமார் 2 மணி நேரம் மோதினர்.

புதுவருடம் பிறந்து நான்காம் நாள், யாழ். முஸ்லிம் மக்கள் நடத்திய அமெரிக்க எதிர்ப்புப் பேரணி நடந்த சில மணி நேரத்தில் இந்த மோதல் ஆரம்பமானது.

துப்பாக்கி வேட்டு, ஷெல் குண்டு வீச்சு, குண்டு வெடிப்பு என்பன ஒரேயடியாகத் தொடர்ந்தும் விட்டு விட்டும் நடந்துகொண்டிருந்தன.

ஹெலிக்கொப்டர் ஒன்றும் தாழப்பறந்து துப்பாக்கி வெட்டுக்களைத் தீர்த்தது.

மோதலின் விளைவாக ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர். ஒரு சிப்பாய் மரணமானார். மூன்று சிப்பாய்கள் காயமுற்றனர்.

பண்ணை வீதியால் சென்ற வான் ஒன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கடலில் விழுந்தது. அதில் இருந்தவர்களுக்கு ஏற்பட்ட கதி தெரியவில்லை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய யோசனையில் அமிருக்கு நம்பிக்கையில்லை

சென்னை, ஏப் 17

தமிழர் தொடர்ந்து கொல்லப்படும்போது இலங்கை அரசின் புதிய யோசனைகள் ஆக்கபூர்வமானவையாகவோ, பலனளிக்கக்கூடியவையாகவோ எப்படி இருக்க முடியும்?

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் கேட்டார்.

கடந்த புதன்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொலிற்பீரோக் கூட்டம் நடந்தது.

அதன் பின்னர் திரு. அமிர்தலிங்கம் செய்தியாளர்களுக்குச் சொன்னதாவது:-

அரச பாதுகாப்புப் படைகள் தமிழ் மக்களைக் கொல்வதை திரு தொண்டமானே தனது பேட்டியில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

போராளிகள்தான் தமிழர்களைக் காப்பாற்றுகிறார்கள்.

அப்படி இருக்கையில் போராளிகள் வேறு எவராலோ ஆத்திரமூட்டத் தூண்டப்படுபவர்கள் என்று திரு தொண்டமான் எப்படிக் கூறமுடியும்?

இப்படி திரு. அமிர்தலிங்கம் வினவினார்.

## அமைச்சர் தஹாவின் பதவி பறி போகும்?

கொழும்பு, ஏப் 18

டாக்டர் தஹநாயக்காவிடம் இருந்து அமைச்சர் பதவி பறிபோக இருப்பதாக கொழும்பின் அரசு வட்டாரங்கள் கூறின.

அக்மீமன இடைத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரை ஆதரித்து பிரசாரக் கூட்டங்களில் பேச மறுத்து விட்டார் டாக்டர் தஹநாயக்கா.

ஐ. தே. க. வேட்பாளர் திரு. அல்பர்ட் சில்வாவை ஆதரித்து நான் எப்படி கூட்டங்களில் பேச முடியும்?

இப்படி ஐ. தே. க. தலைவர் திரு. ஹர்ஷா அபயகுணவர்தனவுக்கு அனுப்பிய கடிதத்திலும் டாக்டர் தஹநாயக்கா கேட்டு இருந்தார்.

அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படவிருப்பதாகக் கூறப்படும் செய்தி பற்றி டாக்டர் தஹநாயக்காவை செய்தியாளர்கள் கேட்டனர்.

அதற்கு டாக்டர் தஹநாயக்கா மௌனஞ் சாதித்தார்.

### சுபநேரம்

18--4--1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6 03 முதல் 7 33 வரை
ராகுகாலம்:
10 33 முதல் 12 03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஸ்ரீ ராம நவமி

## ★ நகரில் நேற்று பேரணி ஹர்த்தால்

நல்லூர், ஏப் 18

யாழ்ப்பாணத்தில் நேற்று ஹர்த்தாலும் ஆர்ப்பாட்டப் பேரணியும் நடைபெற்றன. கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன

அமெரிக்காவின் தேசியக் கொடியும் நேற்று யாழ் செயலகத்திற்கு முன் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது

அமெரிக்கா லிபியா மீது நடத்திய தாக்குதலைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் பேரணி ஒன்றை நடத்தினர்

பேரணியை ஒட்டி நேற்று யாழ்நகரில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ் மக்களும் இதில் பங்குபற்றினர். வாகனங்களும் சேவையில் ஈடுபடவில்லை.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் புதிய சோனகத் தெரு பள்ளி வாசலிலிருந்து ஆரம்பித்த மக்கள் பேரணி முஸ்லிம் கல்லூரி வீதி, மானிப்பாய் வீதி, ஸ்ரான்லி வீதி, பலாலி வீதி, ஆஸ்பத்திரி வீதி ஊடாகச் சென்று யாழ் செயலகத்தை அடைந்தது.

அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றின் பின் மகஜர் ஒன்றும் யாழ் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா, பிரிட்டனை கண்டிக்குமாறு கோரிக்கை

### அரசிடம் யாழ் முஸ்லிம்கள் விடுத்தனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

லிபியா மீது விமானத் தாக்குதல் நடத்தியமைக்காக அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளை இலங்கை அரசு வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

அத்துடன் லிபிய அரசுக்கும் லிபியாத் தலைவர் கேர்ணல் கடாபிக்கும் இலங்கை அரசு பூரண ஆதரவை வெளிப்படுத்துதல் வேண்டும்.

இப்படிக் கூறும் மகஜர் ஒன்று யாழ் மாவட்ட முஸ்லிம் மக்களினால் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பப்பட்டது.

யாழ் அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட இம் மகஜரின் பிரதிகள் லிபிய தூதரகம், அமெரிக்கத் தூதரகம், பிரித்தானிய தூதரகம் ஆகியவற்றுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசு பிரதிநிதிகளுடன் தொடர்பு தகுமோ?

மெல்போர்ன், ஏப்ரல் 17

மனித உரிமை மீறல் சம்பவங்கள் இலங்கையில் நிகழ்கின்றன.

அப்படி இருக்கையில் இலங்கையில் இருந்து வரும் அரசுப் பிரதிநிதிகளுடன் நாம் தொடர்பு வைத்து இருக்கலாமா?

ஆஸ்திரேலிய செனட் சபைக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் செனட்டர் திரு டொன் சிப் மேற்கண்டவாறு கேட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சொன்னதாவது:

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் சகோதரர் டாக்டர் எச். டபிள்யு. ஜெயவர்த்தனா ஆஸ்திரேலியா வந்துள்ளார்.

இந்தோனேஷியாவில் உள்ள கிழக்கு திமோர் கவர்னர் மரியா கார்ட்டொலம் என்பவரும் நமது நாட்டுக்கு வந்துள்ளார்.

மனித உரிமை மீறல் சம்பவங்கள் இந்த இரண்டு நாடுகளிலும் இடம் பெறுகின்றன.

அப்படி இருக்கையில் அந்த நாடுகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்களுடன் நாம் தொடர்பு வைத்திருக்கலாமா? – இப்படி எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார்.

### தேடுதல்

திருகோணமலை, ஏப் 18

திருகோணமலை நகரை அடுத்துள்ள செல்வநாயகபுரம், மூன்றும் கட்டை பகுதிகளில் நேற்றுக் காலை முதல் பலத்த தேடுதல் வேட்டையில் ஆயுதப்படையினர் ஈடுபட்டனர்.

வீடுவீடாகச் சென்று சிப்பாய்கள் தேடுதல் நடத்தினர்.

மாலைவரை தேடுதல் நடந்தது

# நாவற்குழி கைதடியில் 2 நாள் தாக்குதல்

## பொதுமக்கள் இருவர் பலி

கைதடி, ஏப்ரல் 18

நாவற்குழி, கைதடிப் பகுதியில் நேற்றும், நேற்று முன்தினம் (புதன்கிழமை) இரவும் ஷெல் தாக்குதல்களும், ஹெலிக்கொப்டர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் 6 வயதுச் சிறுவன் உட்பட இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இரண்டு போராளிகள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். சில வீடுகள் சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

நேற்றுக் காலை 10 மணியளவில் சுமார் 15 நிமிட நேரம் ஹெலிக்கொப்டரிலிருந்து நாவற்குழி, கைதடி பகுதிகளை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. பின்னர் ஹெலிக்கொப்டர் பலாலிப் பக்கமாகச் சென்றது

மீண்டும் 11 மணியளவில், திரும்பி வந்த அதே ஹெலிக்கொப்டர் 11.30 வரை துப்பாக்கி தாக்குதல், குண்டுத் தாக்குதல், ஷெல் தாக்குதல் ஆகியவற்றில் ஈடுபட்டது.

இதனால் இரு பொதுமக்கள் கொல்லப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் யாழ் நகரில் ஹர்த்தால்

நல்லூர், ஏப், 18

இன்று வெள்ளிக்கிழமையும் யாழ்நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை கொட்டடி நகர் ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலைய முதல்வரும் இணக்க சபைத் தலைவருமான திரு செல்லையா விஜயரத்தினம் கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)



ஆஸ்திரேலியா என்ன, கனடா என்ன யார் சொன்னாப்போல உவைக்கு ரோஷம் வருமெண்டு நினைக்கிறியளே ......!

## மாகாண சபை தான் அரசின் புதிய யோசனையில்

கொழும்பு, ஏப். 18

மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் விஷயங்கள் சம்பந்தமாக நாடாளுமன்றமும் சட்டம் நிறைவேற்ற முடியும்.

இலங்கை அரசு இந்தியாவிடம் சமர்ப்பித்துள்ள புதிய யோசனையில் மேற்கண்ட நிபந்தனையும் அடங்கியுள்ளது என்று தெரிய வருகிறது.

இரண்டு பக்கங்கள் கொண்ட இலங்கையின் புதிய யோசனைகள் நேற்று இந்தியப் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

மாகாணசபை, மக்களால் தெரிவு செய்யப்படும்.

மாகாணசபைக்கு முதலமைச்சர் இருப்பார்.

மாகாண சபைகளுக்கு இடையே ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கும்.

சிங்களம் உத்தியோக மொழி, தமிழ் தேசிய மொழி என்பதில் எந்த மாற்றமும் ஏற்படாது.

காணிப்பங்கீடு, உள்நாட்டுச்சட்டம், ஒழுங்கு பராமரிப்பு முதலிய அதிகாரங்களும் மாகாண சபைக்கு வழங்கப்படும்.

உள்நாட்டுப் பொலிஸ் சேவை, நாட்டின் ஒற்றையாட்சித் திட்டத்தின் முரணாக இருக்க முடியாது

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் உள்ள யூனியன் பிரதேச அந்தஸ்து கொண்டதாக மாகாணசபைகள் அமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தொடர்ந்து தாக்குதல்

பலாலி, ஏப்ரல் 18

நேற்றும் கட்டுவன், மயிலிட்டி, குரும்பசிட்டி, மட்டத்தடிப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

காலை சுமார் 8 மணிக்கு ஒரு முறையும், நண்பகல் 12 மணிக்கு மீண்டும் ஒரு தடவையும் 1 மணிக்கு மூன்றாவது தடவையும் ஹெலிக்கொப்டரில் இருந்து சுடப்பட்டது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திப் படவுலக முடிசூடா மன்னன் அமிதாப்பின் மறக்க முடியாத நாள்

அமிதாப்பச்சன் இந்திப் படவுலகில் இன்றும் முன்னணி நடிகராகத்தான் திகழ்ந்து வருகிறார்.

1969 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதியை அவர் மறப்பதில்லை.

"அன்றுதான் நான் பம்பாய்க்கு வந்தேன். அப்பொழுது வயது இருபத்தேழு. சினிமாவில் நடிக்க நான் வந்த நாள் அது". என்று தான் படவுலக நுழைவுக்குக் காரணமாக இருந்த முதல் பம்பாய்பிரவேசத்தை அமிதாப் தன் இதய 'டைரி' யில் எழுதி வைத்து இருக்கிறார்.

சினிமா உலகில் நடைபெறும் சில தவறுகள் வேறு சிலருக்கு எதிர்பாராத அதிஷ்டங்கள் ஆகிவிடுகின்றன.

அப்படித்தான் அமிதாப்பச்சன் "ஐஞ்ஜீர்" படத்தில் வாய்ப்புப் பெற்றது. அந்தப் படத்தில் முதலில் தேவ் ஆனந்த் நடிக்க இருந்தார். ஏனோ அந்தக் கதாபாத்திரம் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை.

பிறகு அதில் ஜிதேந்திரா என்ற பேச்சு அடிபட்டது அவருக்கும் அதில் ஈடுபாடு ஏற்படவில்லை.

மற்றும் ராஜ்குமார், பிரசாத் மெஹ்ரா போன்றோரின் பெயர்களும் அடிபட்டன. அவர்கள் நடிக்கத் தவறிய கதாபாத்திரத்தில் ஒரு புதுமுகமாக அறிமுகமானார் அமிதாப்.

அவர்கள் தவறவிட்ட கதாபாத்திரம் அமிதாப்புக்குச் சந்தர்ப்பம் வாங்கித் தந்து புகழையும் சேர்த்துத் தந்தது!

அந்தப் படத்தின் வாயிலாக புகழ் பெற்ற நினைவுகளை அமிதாப் அடிக்கடி சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்.

அரசியலுக்கு வந்த பிறகும் கூட தான் சினிமாவை வெறுக்கவில்லை என்றும், சினிமா வாயிலாகத் தனக்குக் கிடைத்த புகழைக் குறைவாக மதிப்பிடுவதற்கு இல்லை என்றும் பெருமையோடு சொல்கிறார் இந்திப் படவுலகின் முடிசூடா மன்னன் அமிதாப்பச்சன்.

தினசரி சினிமா

# யாழ் ஆஸ்பத்திரியில் இரத்தம் இல்லை

## அவசர உதவி கோருகிறார் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், ஏப். 18

அவசர சத்திரசிகிச்சைகளுக்குக் கூட இரத்தம் இல்லாத நிலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை ஆஸ்பத்திரி அத்தியட்சகர் டாக்டர் சுரேந்திரன் நச்சினார்க்கினியன் சொன்னார்.

இரத்தம் வங்கி வேகமாக வற்றுகின்றது. இருக்கும் சிறிதளவு இரத்தமும் கூட ஆபத்தான கட்டத்தில் கொண்டு வரப்படும் நோயாளர்களுக்குப் பயன்படுத்தப்பட முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

தினமும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நோயாளர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படுகின்றனர்.

தொண்டர் ஸ்தாபனங்கள் பொது ஸ்தாபனங்கள், சமூக சேவையாளர்கள் வந்து இரத்தத் தட்டுப்பாட்டை நீக்க உதவ வேண்டும்.

இப்படி அத்தியட்சகர் டாக்டர் நச்சினார்க்கினியன் வேண்டுகோள் விடுத்தார்.

## நெடுங்கேணியில் பிரஜைகள் குழு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஏப். 18

நெடுங்கேணியில் பிரஜைகள் குழு ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அங்குரார்ப்பணக் கூட்டம் ஓய்வுபெற்ற கிராம அபிவிருத்திக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு த முத்தையா தலைமையில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் நெடுங்கேணி கிராமோதய சபைத் தலைவர் திரு. ரி. எம். பீற்றர் பொன்கலன்ட் பிரஜைகள் குழு அமைக்க வேண்டியதன் அவசியத்தையும் அதனால் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளையும் விவரமாக எடுத்துக் கூறினார்.

தலைவர் தனது தலைமையுரையில் நெடுங்கேணியில் இராணுவத்தினர் நடத்திய செயல்களைக் கண்டித்தார்.

## ஆவரங்கால் - அச்சுவேலி வீதியை திருத்தும்படி லயன்ஸ் கழகம் கோரிக்கை

பலாலி, ஏப் 18

ஆவரங்கால் சந்தியில் இருந்து அச்சுவேலி டஸ் நிலைய இலுப்பையடிச் சந்திவரையான வீதியைத் திருத்த பணம் ஒதுக்கப்படாதது வேதனையை அளிக்கிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அச்சுவேலி லயன்ஸ் கழகத்தின் பொதுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் 1986 ஆம் ஆண்டின் அச்சுவேலி லயன்ஸ் கழகத் தலைவராக பேராசிரியரும், யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதியுமான நா. பாலகிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக திரு. முத்துசிவஞானமும், பொருளாளராக திரு. எஸ். சுவாமிநாதனும் பத்திராதிபராக டாக்டர் தங்கராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஹமீத் -- இராசு சந்தித்தனர்

கொழும்பு, ஏப் 18

அமைச்சர் செ. இராசதுரையும் வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீதுவைச் சந்தித்தார்.

புதுப் யோசனைகளுடன் புதுடில்லி செல்லும் முன்னர் சாஹுல் ஹமீதை, அமைச்சர் இராசதுரை சந்தித்தார்.

என்ன பேசினார் என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

## தியேட்டர்களுக்கு மூடு விழா

கொழும்பு, ஏப் 18

கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையில் 84 தியேட்டர்கள் மூடப்பட்டன.

அவற்றில் 56 வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளன.

தமிழ்ப் படங்களை வெளியிடும் படமாளிகை உரிமையாளர்கள் 3 கோடி 80 லட்சம் ரூபா நட்டமடைந்தனர்.

சிங்களப்படம் வெளியிடும் படமாளிகை உரிமையாளர்கள் 3 கோடி 52 லட்சம் ரூபா நட்டம் அடைந்தனர்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில்

# தீவிரவாதிகளைத் தடுப்பதே இந்தியாவுக்கு உள்ள பங்கு

## ஆஸி வானொலிக்கு ஜனாதிபதியின் பேட்டி

மெல்போர்ன், ஏப். 17

தீவிரவாதிகளைத் தடுத்து நிறுத்துவதைத் தவிர, தமிழர் பிரச்சினைக்கு பரிகாரம் காணுவதில் இந்தியாவுக்கு எதுவித பங்கும் இல்லை.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன சொன்னார்.

ஆஸ்திரேலிய வானொலிக்கு அளித்த பேட்டியிலே திரு. ஜெயவர்த்தன இத்தகவலை வெளியிட்டார்.

ஆஸ்திரேலிய வானொலியின் தேசிய செய்தியாளர் ஜோன் மில்ஸ் திரு. ஜெயவர்த்தனவைப் பேட்டிகண்டார்.

பேட்டியில் திரு. ஜெயவர்த்தன மேலும் கூறியிருப்பதாவது:

தென்இந்தியாவில் இருந்து தீவிரவாதிகள் இயங்குவதை இந்தியா நிறுத்தினால், இலங்கையில் தீவிரவாத இயக்கமே இருக்காது.

தமிழ்நாடு அரசுக்குத் தெரிந்தே தீவிரவாதிகள் ஆயுதங்களைப் பெறுகின்றார்கள். தீவிரவாதிகளின் தலைவர்கள் சென்னையில் இருந்துகொண்டு பேட்டியும் கொடுக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் அரச விருந்தினர்களாகவும் இருக்கின்றார்கள்.

இலங்கையில் தனித் தமிழ்நாடு அமைக்கப்படுவதற்கு தமிழ்நாடு அரசு ஆதரவளிக்க முடியும்; ஆனால் அவர்கள் நிச்சயம் வன்செயலுக்கு ஆதரவளிப்பதை நிறுத்தவேண்டும்.

தீவிரவாதிகளைத் தடுத்து நிறுத்துவதைத் தவிர தமிழர் நெருக்கடிக்குத் தீர்வு காணுவதில் வேறு எந்தப் பங்களிப்பும் இந்தியாவுக்குக் கிடையாது.

தமிழ் பிரிவினைவாதிகளுக்குத் தொடர்ந்தும் இந்தியா ஆதரவளித்து வருகிறது.

மகாத்மாகாந்தி, புத்த பெருமான் அவதரித்த நாடு வன்செயல்களுக்கு ஆதரவளிப்பது ஆச்சரியமாக உள்ளது.

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிப்பதை நிறுத்தும்படி மேற்கு நாடுகள் இந்தியாவை நிர்ப்பந்திக்கவேண்டும்.

பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளிக்கும் தமிழ்நாடு அரசுமீது பிரதமர் ராஜீவ்காந்தி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்கு நாடுகள் இது சம்பந்தமாக திரு ராஜீவ் காந்தியை வற்புறுத்த வேண்டும்' — இப்படி திரு ஜெயவர்த்தன பேட்டியில் குறிப்பிட்டார்.

## கடத்தப்பட்டவர் பின்னர் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்

பூநகரி, ஏப் 18

கடந்த வாரம் பூநகரியில் வைத்துக் கடத்தப்பட்ட இருவரில் ஒருவர் புத்தாண்டு தினத்தில் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

ஜே எவ். அரியநாயகம், எஸ் பாஸ்கரன் (இருவரும் பூநகரி வாசிகள்) ஆகியோர் கடந்த வாரம் இனந்தெரியாத இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர்.

பின்னர் அரியநாயகம் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

இவரது சடலம் பூநகரி வில்லடி என்ற இடத்தில் மரம் ஒன்றுடன் கட்டப்பட்டிருந்தது.

சடலத்துடன் கடிதம் ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது.

இந்த நபர் முன்னர் பூநகரி அபிவிருத்திச் சபையின் உப அலுவலகத்தில் சிற்றூழியராகக் கடமை புரிந்தவர் எனக் கூறப்படுகிறது.

## சடலம் அரச செலவில் அடக்கம்

சாவகச்சேரி, ஏப். 18

சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலையத்தில் அநாதரவாகக் கிடந்த இளைஞரின் சடலம் எவரும் அடையாளம் காட்டாத காரணத்தால் சாவகச்சேரி பொதுமயானத்தில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

சாவகச்சேரி சட்ட வைத்திய அதிகாரி திரு. டி. சோமசுந்தரம் பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு ந தர்மேந்திரன் தற்கொலை மரணம் என தீர்ப்பு வழங்கினார்.

# குமுதினி படகு

## படுகொலை நினைவுத் தூபி நிறுவ நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 18

கடந்த வருடம் மே மாதம் இடம்பெற்ற குமுதினி படகுப் படுகொலையில் பலியான மக்களின் நினைவாக் தூபி அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் நெடுந்தீவில் நடைபெறும்.

நெடுந்தீவுப் பிரஜைகள் குழு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

நினைவுத்தூபி நிறுவுவதற்கான நிதி உதவி பொது மக்களிடமிருந்து பெறப்படும்.

நிதியின் ஒருபகுதியை தென்னிந்தியத் திருச்சபை யாழ் ஆதீனம் வழங்க முன்வரும் என மேற்படி திருச்சபையின் யாழ் ஆயர் அதிவண டி ஜே அம்பலவாணர் பிரஜைகள் குழுவிடம் உறுதியளித்துள்ளார் என்று தெரிகிறது.

மிகவும் கூடுதலான நிதி உதவி கிடைக்கும் பட்சத்தில் நினைவுத்தூபிக்கான செலவுகள் போக மீதித்தொகையை இறந்தவர்களின் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பிரஜைகள் குழு ஆலோசித்துள்ளது.

## திருஉருவ அஸ்தி ஸ்தாபித வைபவம்

சாவகச்சேரி, ஏப். .18

மட்டுவில் வடக்கு வைத்தியசாலை வீதியில், உள்ள சங்கர ஆச்சாரிய சுவாமிகள் ஆச்சிரமத்தில் ஸ்ரீ திருப்புகழ் சுவாமிகள் அருள் திருஉருவ அஸ்தி ஸ்தாபித வைபவம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடைபெற்றது.

பணம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா ஆச்சிரம மணிமண்டபத்தைத் திறந்து வைக்க வைத்தியகலாநிதிகள் சி. சின்னப்பு. பே. பிலிப் ஆகியோர் அஸ்தியை ஸ்தாபித்தனர்.

சமாதானநீதிபதி திரு கே. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. சி. எஸ். சிதம்பரநாதன் ஆசிஉரை வழங்கினார்.

திருப்புகழ் சுவாமிகளின் சீடரான வைத்திகலாநிதி திரு சி சின்னப்புவின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்ச்சி அன்னதானத்துடன் நிறைவேறியது.

## அன்னதானம்

வட்டுக்கோட்டை, ஏப் 18

பண்டத்தரிப்பு காலையடி இடும்பன் முருகன் ஆலயத்தில் வருடாந்த அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது.

பெருந் தொகையான பக்தர்கள் இந்த அன்னதான நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## அம்புலன்ஸுக்கு ரூபா 250

பருத்தித்துறை, ஏப் 18

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து அவசர சிகிச்சைக்காக யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் அம்புலன்ஸ் வண்டிக்கு நோயாளிகளிடமிருந்து ஒருமுறை சென்றுவருவதற்கு ரூபா 250 அறவிடப்பட்டது.

இத்தொகை வசூலிப்பதை உடனடியாக நிறுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி திரு தே லலிதகுமார் பணித்துள்ளார்.

## சுவரொட்டி

அம்பாறை, ஏப்ரல் 18

லிபியா மீதான அமெரிக்க விமானத் தாக்குதலைக் கண்டித்து அம்பாறை மாவட்டத்தில் கண்டனச் சுவரொட்டிகள் காட்சி அளிக்கின்றன.

## நெடுங்கேணி பிரஜைகள் குழு

யாழ்ப்பாணம், ஏப் 18

நெடுங்கேணி பிரஜைகள் குழு உறுப்பினர்கள் வருமாறு:-

தலைவர்:- திரு. த முத்தையா துணைத்தலைவர்கள்:- திரு.சி. தர்மலிங்கம், திரு. சி. நா. செல்லத்துரை, பொதுச்செயலாளர்:- திரு. ரி எம். பீற்றர் பொன்கலன்ட், துணைச்செயலாளர்:- திரு ஆ. தம்பையா நிதிச்செயலாளர்:- திரு. வி குகராசா.

நிர்வாகசபை உறுப்பினர்கள்:- திருவாளர்கள்: வ. ஆறுமுகம், க. வே. கந்தசாமி, அ க. செல்வரத்தினம், வெ இராசேந்திரா, நா. சிவகுரு, பொ. மங்களஜெயநாதன், ச செல்லத்துரை, தி கந்தசாமி, சி. துரைராசசிங்கம். கணக்காளர்: திரு தி ஜெயதரன்.

## தேவை

பாவித்து நல்ல நிலையிலுள்ள கலர் தொலைக் காட்சிப் பெட்டி விலைக்குத் தேவை. விளம்பர இலக்கம்:17,0 ம/பா. உதயன், த.பெ. எண்: 23, யாழ்ப்பாணம்.

## உடன் தேவை

கிரைண்டிங் மில்லில் 5 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள திறமையான டிரைவர் உடனே தேவை தங்குமிட வசதி உண்டு. நேரில் வரவும்: Manju Grinding Mill, Puliankoodal Junction, Kayts.


## LANKA CEMENT LIMITED

KANKESANTHURAI.

# ஏல விற்பனை

பாவிக்கப்பட்ட துண்டுக் கம்பிகள், முறுக்குக் கம்பிகள், 'ஆங்கிள் அயன்கள்' (Angle Iron) "I" வடிவ உருக்குத் திராந்திகள், ஆயுதங்கள் என்பன 1986-04-20 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் லங்கா சிமேந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏல விற்பனையில் விடப்பட உள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 1986-04-19 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4-00 மணி வரை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 3ஆம் கூற்று முடிவடைந்த உடன் முழுத்தொகையின் 1/3 பகுதிப் பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு, மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும்.

பொருட்கள் பகுதி பகுதியாகக் கொள்வனவு செய்வோர் ஏல விற்பனைத் திகதியான 20-4-1986 இல் இருந்து 02 நாட்களுக்குள்ளும் முழுக் கூறுகளும் ஒன்றாகக் கொள்வனவு செய்வோர் மேற்குறிப்பிட்ட தினத்தில் இருந்து (5) ஐந்து நாட்களுக்குள்ளும் விற்கப்பட்ட பொருட்களை அகற்றவேண்டும்.

பொது முகாமையாளர்,
லங்கா சிமேந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

16-04-1986.


### கிளிநொச்சியில்

# காணி அனுமதி பத்திரம் இல்லாது மக்கள் அவதி

கிளிநொச்சி, ஏப். 18

கிளிநொச்சி மாவட்டக் காணி அலுவலகத்தில் கடந்த பல மாதங்களாக அரசாங்கத்தால் வழங்கப்படும் 464 ஆம் அத்தியாய காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின் காணி அனுமதிப் பத்திரத்திற்கு பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது.

கிளிநொச்சி புதிய மாவட்டமாகக் கச்சேரி நிறுவப்பட்டு காணி அலுவலக [illegible] மாவட்டக் காணி அதிகாரி, மேலதிக அரசாங்க அதிபர் (காணி) என பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வேலைகள் யாவும் துரிதப்படுத்தப் பட்டிருக்கும் இவ்வேளையில் காணி உத்தரவுப் பத்திரம் இல்லாதிருப்பது குறித்து பொது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கிய பிரச்சினை காணிப்பிரச்சனை ஆகும். வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத காணித் தகராறு [illegible] அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணிகள் என்றும் அகதிக் குடியேற்றம் என்றும் படித்த வாலிபர் யுவதிகள் திட்டங்கள் என்றும் அத்துமீறிக் குடியேறிய காணிகள் என்றும், பலதரப்பட்ட நிலையிலுள்ள காணிகளில் மக்கள் வாழுகின்றனர்.

இந்தக் காணிகளுக்கு முற்று முழுதான காணி உத்தரவுப் பத்திரங்களோ, முடிக்குரியகாணி உறுதிகளோ கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நிலையில் தேவையான பத்திரங்கள் இல்லாதது குறித்து மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

## மின்தடை

### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-04-20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அனுராதபுரத்திலிருந்து வரும் 132 கே.வி.மின் மார்க்கத்தில் அவசர திருத்த வேலை காரணமாக, காலை 6.00 மணி தொடக்கம் மாலை 5 00 மணி வரை யாழ் பிரதேச மின் பொறியியலாளரின் அதிகாரத்துக்குள் இருக்கும் யாழ்ப்பாணம், சுன்னாகம், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, வேலணை ஆகிய மக்களுக்கு மின்தடை ஏற்படுமென அறியத்தருகின்றோம்.

மேலும், கிளிநொச்சிப் பிரதேச மின் பொறியியலாளரின் அதிகாரத்துக்குள் இருக்கும் சகல பகுதிகளுக்கும் காலை 6.00 மணியிலிருந்து 6 30 மணி வரையும், மாலை 4 30 மணியிலிருந்து 5.00 மணி வரையும் மின் தடை ஏற்படுமென அறியத்தருகின்றேன்.

இம் மின் தடையால் பாதிப்படைய இருக்கும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது வருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு,
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்.
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

# வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

தெளிந்த மனமும் தூய வாழ்வும் பழகப் பழக அமையும். மிகைப்பட்ட பேச்சுக்களை விட்டுவிட வேண்டும். பக்தியால் தீய எண்ணங்களைக் கொல்லலாம்.

- தர்மசக்கரம்.


# உதயன்

இலட்சியம் - அநீதி - தர்மம் - ஒற்றுமை

இல. 15, கேதுநாச ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 18-04-86

தொலைபேசி: 24805, 22073 த. பெ. 23


## அமெரிக்கா - இஸ்ரவேல் - இலங்கை

லிபியா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானது.

பயங்கரவாதத்தை அழிக்க வேண்டும், சர்வதேச பயங்கரவாதத்தைப் பூண்டோடு ஒழிக்க வேண்டும் என்று அமெரிக்கா பேச்சளவில் கூறிவந்தது.

ஆனல் கடந்த செவ்வாய்க்கிழமை லட்சக் கணக்கான மக்கள் வாழும் திரிப்போலியில் அமெரிக்கா நடத்தியது போன்ற பெருவளவிலான பயங்கரவாதம் வேறு எதுவும் இருக்க முடியாது.

இஸ்ரவேலுக்கு அடுத்த இடத்தை அமெரிக்கா எடுத்திருக்கிறது. பலஸ்தீனியர்கள் ஒரு சிறிய தாக்குதலை நடத்தினால் போதும். அதன் நாலு மடங்கு பரிமாணத்தில் பதில் தாக்குதலை நடத்தி வந்தது இஸ்ரவேல்.

அதன் விளைவாகப் பலஸ்தீனியர்கள் தமது தாயகத்தைப் பறிகொடுத்து அனாதைகளாக வேண்டியதாயிற்று.

அதே பாணியில், பேர்லினில் நடந்த ஹோட்டல் தாக்குதலை லிபியா நடத்தியதாகக் கூறி, அதற்குப் பதிலாக மக்கள் அடர்ந்து வாழும் பெரும் நகர் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருக்கிறது.

சர்வதேச விதிகள் யாவும் மீறப்பட்டுவிட்டன. ஐ. நா.விலோ அல்லது வேறு எந்த உலக அமைப்பிலோ லிபியாவைப் பற்றிப் புகார் செய்யப்படவில்லை.

தானே குற்றச்சாட்டைத் தொடுத்து, தானே தீர்ப்பு வழங்கி, தானே தண்டனையும் கொடுத்திருக்கிறது அமெரிக்கா.

நாகரிக காலத்தின் எந்த விதிமுறைக்கு இது பொருத்தம்? ஆயுத, படை, பண பலம் இருக்கும் நாடுகள் சிறிய, நிதி வசதி குறைந்த நாடுகளை எதுவும் செய்யலாம் என்ற ஒவ்வாத உதாரணம் ஒன்றை அமெரிக்கா செயலில் காட்டி இருக்கிறது.

இந்தச் செயல் அதன் ஏகாதிபத்தியம், ஆக்கிரமிப்பு, முதலாளித்துவம் ஆகிய கொள்கைகளின் ஒரு 'சாம்பிள்' துளி.

தாங்கள் சிறிய தாக்குதலையே நடத்தியிருப்பதாகவும் வேண்டுமானல் மேலும் தாக்குதல் நடத்தப்போவதாகவும் அதிபர் றேகன் இறுமாப்புடன் கூறியிருந்தார். அவ்வாறே நேற்று மீண்டும் தாக்குதல் நடந்திருக்கிறது.

இது அவரது ஏகாதிபத்திய திமிரையும், தான் நினைத்ததைச் செய்யலாம் என்ற மமதையையும் யுத்த வெறியையும் எடுத்துக் காட்டுகிறது.

இந்தப் போக்கை விட்டு வைக்கக்கூடாது. உலக நாடுகளுக்கு, குறிப்பாக பண, பல வசதி குறைந்த சிறிய நாடுகளுக்கு இது ஒரு சவால். எனவே அனைவரும் ஒரே அணியில் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை எதிர்க்க வேண்டும். இன்று லிபியாவுக்கு நாளை யாருக்கோ..?

இலங்கையும் ஒரு சிறிய நாடு. அணிசேரா இயக்கத்தைச் சேர்ந்த நாடு. அதற்கு ஒரு கால் தலைமை வகித்த பெருமையும் கொண்டது.

அமெரிக்காவின் அனுச்சாரத்தை உலக நாடுகள் பல கண்டித்துவிட்டன. இந்தியா மட்டுமல்ல அமெரிக்க ஆதரவு நாடு எனக் கருதப்படும் பாகிஸ்தானே கண்டித்து விட்டது.

ஆனல் இலங்கை 'கப்சிப்' என்று இருக்கிறது.

பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறித்தான் இலங்கை அரசாங்கம், அரச பயங்கரவாதம் புரிகிறது. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ மக்களைக் கொன்று குவிக்கிறது. அமெரிக்காவும் சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் எனக் கூறிய வண்ணமே அரச பயங்கரவாதம் புரிந்திருக்கிறது.

இதுபோன்ற விஷயங்களில் அமெரிக்கா—இஸ்ரவேல்—இலங்கை இந்த மூன்று நாடுகளுக்கிடையிலும் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன.

அப்படி இருக்கும்போது இலங்கை எப்படி அமெரிக்காவைக் கண்டிக்க முடியும்?

# லிபியாமீது அமெரிக்கா மீண்டும் குண்டு வீச்சு

## கடாபி தொலைக்காட்சியில் தோன்றி கண்டனம்

திரிப்போலி, ஏப்.17

திரிப்போலியிலும் இன்னும் வேறு சில லிபிய நகரங்களிலும் அமெரிக்க விமானங்கள் குண்டுவீசி நாசம் விளைவித்துள்ளன.

கேர்ணல் கடாபி மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

லிபிய தொலைக் காட்சியில் அவசரமாகத் தோன்றி நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார்.

அவர் தமது உரையில் மேலும் ஆவேசத்துடன் கருத்துக்களைத் தெரிவித்தபோது;

லிபியாவை அழித்துவிடக் கங்கணம் கட்டியுள்ள அமெரிக்க பயங்கரத்துக்கு எமது நாடு அடி பணிந்து விடாது.

வான தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது எமது படைகள் பலமான பதிலடி கொடுத்தன. 4 விமானங்களையும் சுட்டு வீழ்த்தின.

இதை அடுத்து தப்பிக் கொண்ட அமெரிக்க விமானங்கள் இந்தப் பிராந்தியத்துக்கு அப்பால் வேகமாகப் பறந்தோடி விட்டன என்றார்.

அமெரிக்க குண்டு வீச்சினுல் லிபியாவின் வைத்தியசாலைகள் பல சேதம் அடைந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சியில் தோன்றிப் பேசும்போது கடாபி இராணுவ உடையில் காணப்பட்டார்.

கடாபியின் வாசஸ்தலம் குண்டு வீச்சில் சேதம் அடைந்து-

அவரது வளர்ப்பு மகள் குண்டுத் தாக்குதலின் போது இறந்து விட்டார்.

இந்த சம்பவங்கள் அவரை மேலும் ஆத்திரமடையச் செய்துள்ளது.

இவ்வாறு செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிபியாவில் ஆட்சிக் கவிழ்ப்புக்கான திடீர்ப் புரட்சி ஒன்று நடக்கிறது என்ற செய்தி வெறும் யூகம் தான் என்பது கடாபி தொலைக்காட்சியில் தோன்றியதன்மூலம் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

லிபியா அமெரிக்க விமானங்களை சுட்டு வீழ்த்தியதுபற்றி ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் கருத்துக் கூறிய பொழுது அது வெறும் கட்டுக்கதை என்று தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடந்து கொண்டிருக்கும் அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மட்டமாநாடு லிபியாமீதான அமெரிக்க நடவடிக்கையை ஒருமுகமாகக் கண்டித்துள்ளது.

அணிசேரா அமைப்பின் தலைமை நாடான பாரதம் லிபியாவுக்கான தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு நாடுகளும் தமது ஆதரவை லிபியாவுக்குத் தெரிவித்துள்ளன.

அமெரிக்க அத்துமீறலையும் அடாவடித்தனத்தையும் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்த சோவியத்ரஷ்யா லிபியாவுக்கான தனது பூரண ஆதரவையும் தெரிவித்துள்ளது.

இராணுவத் தலையீடு ஏதும் மேற்கொள்ளும் திட்டம் உண்டா எனக் கேட்கப்பட்டபொழுது;

அப்படியான தலையீடு எதிர் விளைவுகளை உண்டாக்கும். சோவியத் யூனியன் அப்படியொரு நிலையை உருவாக்காது. எனினும் நிலைமைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய வழிவகைகளைக் கையாளும் எனத் தெரிவித்துள்ளது.

லிபியாமீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு எதிராக அமெரிக்காவிலும் லண்டன், பொன், கொப்பனேஹன் நகர்களிலும் மக்கள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

**வெளி உலகில்**

## நிக்கரகுவாவுக்கு எதிராக நிதி இல்லை

### றேகனின் கோரிக்கையை காங்கிரஸ் நிராகரித்தது

வாஷிங்டன், ஏப்ரல் 17

நிக்கரகுவா சான்டினிஸ்டா அரசுக்கு எதிரான கொன்ரு கிளர்ச்சிப் படைகளுக்காக ஜனதிபதி றேகன் கோரிய 10 கோடி டாலர் நிதி உதவியை காங்கிரஸ் நிராகரித்துவிட்டது.

பெரும்பான்மையான ஜனநாயகக்கட்சி உறுப்பினர்கள் சேர்ந்து றேகனின் கோரிக்கைக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

எனினும் அங்குள்ள கிளர்ச்சிப்படைகளை அங்கிருந்து வேறு நாடுகளுக்கு அனுப்பும் செலவுகளாக 2 கோடியே 70 லட்சம் டாலர்களை காங்கிரஸ் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்யாண தரகருக்கு மவுசு!

டோக்கியோ, ஏப் 17

ஜப்பானில் மலைப்பகுதி கவயி பிரதேசம்.

அங்கு கல்யாணத் தரகர்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

5,300 மக்கள் வாழும் இம்மலைப் பிரதேசத்தில் 500 பேர் திருமணத்திற்குக் காத்து உள்ளனர்.

ஒரு மணமகளை அல்லது மணமகனைப் பிடித்துக் கொடுத்தால் 1லட்சம் யென் தரகுப்பணம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சீனவில் ஷேக்ஸ்பியர் விழா

பீகிங், ஏப்ரல் 17

ஷேக்ஸ்பியர் விழாவை சீன முதலாவது தடவையாக நடத்துகிறது.

இரண்டு வார காலம் நடத்தப்படவிருக்கும் இவ்விழாவை பீகிங்கில் உள்ள பிரிட்டிஷ் தூதர் சர் ரிச்சர்ட் ஈவான்ஸ் கடந்த வியாழக்கிழமை தொடக்கி வைத்தார்.

1966-76 கலாசாரப் புரட்சியின்போது ஷேக்ஸ்பியர் நாடகவிழாக்கள் தடைசெய்யப்பட்டன.

ஷேக்ஸ்பியர் நாடக விழா ஒரே நேரத்தில் பீகிங்கிலும் ஷாங்காயிலும் நடக்கின்றன.

ஷேக்ஸ்பியரை, பீகிங் மக்கள் விரும்புகிருர்கள். இப்படி ஷேக்ஸ்பியர் கழகத் தலைவர் வேயோயு சொன்னதாக சைனு டெய்லி என்ற ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டது.

## சனநெரிசலில் இறந்தோர் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்தது

புதுடில்லி, ஏப் 17

ஹரித்துவார் நகரில் புனித கங்கையில் இடம்பெற்ற கும்பமேளா உற்சவத்தில் குறைந்தது 50 யாத்திரிகர்கள் சனநெருக்கடியில் அகப்பட்டு நசுங்கி மரணமானர்கள் என்று அறிவிக்கப்பட்டது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த உற்சவத்தில் 40 லட்சத்துக்கு அதிகமானேர் கலந்து கொண்டனர்.

5 000 பொலிஸார், 6,000 தொண்டர்கள் சேவை புரிந்தனர்.

1954 இல் இடம்பெற்ற கும்பமேளா உற்சவத்தில் குறைந்தது 500 பேர் மரணமானர்கள்.

## 24 வருடங்கள் மயக்க நிலையில் கிடந்த பெண்

பெல்கிறேட், ஏப். 17

24 வருடங்களாக மயக்க நிலையில் கிடந்த 50 வயதான யூகோஸ்லேவியா பெண் மயக்கம் தெளியாமலே கடந்த திங்கட்கிழமை இறந்து விட்டார்.

வைத்திய உலகில் நீண்டகாலம் மயக்கநிலையில் கிடந்து இறந்த முதலாவது பெண் இவராகும்.

இருதய நோயின் பின்னர் இவருக்கு ஒரு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

1962 இல் இவர் மயக்கம் அடைந்தார். 15 ஆண்டுகளுக்கு முன்னர் இவர் சட்டபூர்வமாக இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. பெண்ணின் பெயர் வெளியிடப்படவில்லை.

# கந்தபுராண படனவழக்கு அருகி வருவது வேதனை தருகின்றது

### துணைவேந்தர் 'வித்தி' கவலை

யாழ்ப்பாணம், ஏப். 18

எமது கலாசார மரபாக மலர்ந்துள்ள கந்தபுராண படன வழக்கு இன்று யாழ் பிரதேசத்தில் அருகி வருவது வேதனை தருவதாக உள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற கந்தபுராண படன நிறைவு விழாவில் சிறப்புரை ஆற்றிய துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபைத் தலைவர் திரு. மு. ஞானப்பிரகாசம் தலைமை வகித்தார்.

'பக்தியை வளர்க்கும் திருவிளையாடல் புராணம், தொண்டை வலியுறுத்தும் பெரிய புராணம, மும்மல நீக்கத்தை வலியுறுத்தும் கந்தபுராணம் ஆகியவற்றைப் போற்றிப் படிக்கும் மரபை நல்லை ஆதீனம் பேணிவருகிறது'.

நல்லை ஆதீனத்தலைவர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இவ்வாறு தனது ஆசியுரையில் கூறினர்.

'கந்தபுராண படனவழக்கு தமிழகத்தே தோன்றிய போதிலும், ஈழத்தில் போற்றப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அம்மரபு இங்கு போல் பரவவில்லை.

இருப்பினும் இம்மரபு இன்று நமது மக்கள் மத்தியில் அருகி வருகிறது. இவ்வழக்கிலே இளையோரையும் ஈடுபடச்செய்தல் அவசியம். அப்போதுதான் இம்மரபினைத் தொடர்ந்தும் பேணிக் காக்கலாம்'

இவ்வாறு பேராசிரியர் வித்தியானந்தன் தொடர்ந்து, கூறினர்.

'கந்தபுராணத்தில் விவரிக்கப்படும் தெய்வயானை திருமணச்சடங்கு முறை ஜப்பான் நாட்டிலும் காணமுடிகிறது. இது ஆராய்ச்சிக்குரிய பொருளாக அமைகிறது.

கந்தபுராண கலாசார மரபைப் பேணிக் காக்கும் பாரியபொறுப்பு இன்று பெண்களுக்கு உண்டு. சிறுவர் சிறுமியரிடையே இவ்வுணர்வை ஊட்ட அவர்கள் முயல வேண்டும்.

இவ்வாறு திருமதி. மனேன்மணி சண்முகதாஸ் குறிப்பிட்டார்.

'கந்தபுராணம் சைவசித்தாந்த கருத்துக்களை எடுத்துக்கூறும் இலக்கிய சுவை நிரம்பிய நம்பிக்கை ஊட்டும் நூலாக விளங்குகிறது.

ஆரம்பத்தில் தீமை பெறும் வெற்றியையும், சத்தியம் முகங்கொடுக்கும் தோல்விகளையும், சற்றில் தருமம் வெல்வதையும் கந்தபுராணம் எடுத்தியம்புகிறது.

பல்வேறு வெளிநாட்டு படையெடுப்புக்கள், இயற்கை அழிவுகள், சுரண்டல்கள் மத்தியிலும், நாவலர் பெருமான் போன்றவர்களின் வழிகாட்டல் காரணமாக நமது நாட்டில் கந்தபுராண கலாசாரம் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.

இன்றும் மரண ஓலங்களின் மத்தியிலும் நாம் கந்தபுராண கலாசாரத்தைப் பேணிக்காத்து அடுத்த தலைமுறையினருக்கு வழங்கவேண்டும்.

முதிர் சிவமடைந்த ஆன்மா இறைவனை நாடிச் செல்வதை தெய்வயானை திருமணத்திலும் பதி தானாக ஆன்மாவைத் தேடி வருவதை வள்ளியம்மை திருமணத்திலும் கண்டு இன்புறுகிறோம்.'

இவ்வாறு பேராசிரியர் கலாநிதி ஆ. சண்முகதாஸ் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

''கந்தபுராண படன வழக்கு தமிழகத்தில் அழிந்துவிட்டது. தமிழகத்து நூல்விற்பனை நிலையங்களில் கந்தபுராணம் என்ற நூல் இருக்கிறதா என்ற தகவல்கூடத் தெரியாமல் இருக்கின்றன. இது நான் நேரில்கண்ட அனுபவம்.

உண்மையை பத்திரங்கள் ஊடாக, கதைகளூடாக, பெரிதுபடுத்திக் காட்டும் பூதக்கண்ணுடி புராணம். இன்று நமது மண்ணில் நிகழும் தீமைகளைக் காணுமிடத்து கந்தபுராணத்தில் இல்லாத புதுகு வேறெங்கும் இல்லை என்ற நிலை மாறி இதில் உள்ளது முற்றிலும் உண்மை என்ற நிலை உருவாகி உள்ளது.

கந்தபுராண படன வழக்கு நமது பழைய மரபு. இப் படனத்துக்கு பல கோயில்களில் நிதி வைப்புக்கூட ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இவற்றை நாம் தொடர்ந்து பேணுவது அவசியம்.

ஆலயங்கள், சைவ மடங்கள் வெறும் கட்டடங்களாக, சோற்று மடங்களாக, சோம்பேறிகளின் இருப்பிடமாக அமைக்கூடாது. பணி புரியும் மையங்களாக மலரவேண்டும். இவ்வாறு செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது பேச்சில் விளக்கிக் கூறினர்.



### பொய்யாமொழி

குறள்:

தீயினுற் சுட்டபுண் உள்ளாறும் ஆறுதே
நாவினுற் சுட்ட வடு.

பொருள்:

தீயினுற் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனல் நாவினுல் தீய சொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆருது.

## யாழ் இலக்கிய வட்டம் நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஏப் 18

யாழ் இலக்கிய வட்டத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு விழா, இலக்கியப் பேரவை பரிசளிப்பு விழா ஆகியன நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நல்லூர் இந்து விடுதியில் நடைபெற உள்ளன.

பிற்பகல் நிகழ்ச்சி 4 கட்டங்களாக நடைபெறும்.

நிகழ்ச்சி: 1

மங்கள விளக்கேற்றல்: திரு. ந. சபாரத்தினம், ஆசிரியர், ஈழநாடு; திரு. எஸ். திருச்செல்வம், ஆசிரியர், ஈழமுரசு; திரு. ம. வ. கானமயில்நாதன், ஆசிரியர் உதயன், சஞ்சீவி.

தமிழ் வாழ்த்து: புலவர் பார்வதிநாதசிவம்

வரவேற்புரை: செம்பியன் செல்வன்

தொடக்கவுரை: மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம்.

தலைமையுரை: சபாரத்தினம்

நிகழ்ச்சி: 2

இலக்கியப் பேரவைப் பரிசளிப்பு: அறிக்கை: செங்கை ஆழியான்:

பரிசளிப்புரை: பேராசிரியர் அ. சண்முகதாஸ்

பரிசு பெறுபவர்: இலக்கிய ஆராய்ச்சி- பேராசிரியர் சு. வித்தியானந்தன்

நாவல்— செங்கை ஆழியான்

சிறுகதைத் தொகுதி:- செ. கதிர்காமநாதன்.

கவிதைத் தொகுதி— நீலாவணன்

காவியம் — மஹாகவி

நாடகம் —செம்பியன் செல்வன்

சிறுவர் இலக்கியம்— த. துரைசிங்கம் பா. சத்தியசீலன்

சிறப்புரை: பேராசிரியர் சு. வித்தியானந்தன்

நிகழ்ச்சி: 3

பொன்னுடை போர்த்துக் கௌரவிக்கப்படுவோர்-

கவிஞர் செ. கதிரேசர் பிள்ளை, கவிஞர் வே. ஐயாத்துரை.

பொன்னுடை போர்த்துபவர் — பேராசிரியர் வித்தியானந்தன்

பாராட்டுரை வழங்குவோர்— மயிலங்கூடலூர் பி. நடராசன், யாழ்வாணன்

நிகழ்ச்சி: 4

நூல்வெளியீடுகள் — யாழ் இலக்கிய வட்டம்: இரு தசாப்தங்கள் — சில சிந்தனைகள்: யாழ்வாணன்

வெளியீட்டுரை: சொக்கன்

மரணத்தின் நனவுகள்— கல்வயல் வே. குமாரசாமி. வெளியீட்டுரை: முருகையன்.

## கையெழுத்து சேகரிப்பு

மட்டக்களப்பு, ஏப். 18

தமிழ் பகுதியிலிருந்து 10லட்சம் கையொப்பம் பெற்று ஜனதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கும் மகஜருக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலும் கையொப்பம் பெறப்பட்டு வருகின்றது.

இப்பணியை மட்டக்களப்பு ஜனநாயகக்குழு மேற்கொண்டு வருகிறது.

## அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

### கொழும்பிலும், அம்பாறையிலும்

அம்பாறை, ஏப். 18

அம்பாறை மாவட்டத்திலும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

லிபியா மீதான அமெரிக்காவின் விமான தாக்குதலை ஆட்சேபித்து இந்த ஆர்ப்பாட்டத்தை அம்பாறை மாவட்ட நன்ருல் இஸ்லாம் இயக்கம் ஒழுங்கு செய்துள்ளது.

இதேவேளை கொழும்பிலும் இன்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள் சங்க சம்மேளனம் இது சம்பந்தமான ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

சாஹிரா மைதானத்தில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும்.

திங்கட்கிழமை சாஹிரா மைதானத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறும்.

## பாரதத்தின் கட்சிகள் ஐக்கியமாக வேண்டும்

### இலங்கைத் தமிழருக்கு உதவ வழி இதுதான் என்கிறர் பண்ருட்டி

மதுரை, ஏப்ரல். 17

இலங்கைத் தமிழருக்கு ஒத்தாசைபுரியும் விதத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஐக்கியப் பட்டுச் செயற்படவேண்டும்.

இப்படித் தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் சொன்னர்.

உலகத் தமிழ்ச்சங்க அங்குரார்ப்பண விழாவை ஒட்டி நடந்த கருத்தரங்கு ஒன்றில் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் பேசினர்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது:-

இந்தியாவின் மக்கள் தொகையில் 7 சத வீதத்தினரே தமிழர். ஆனல் இலங்கையின சனத்தொகையில் 20 சத வீதத்தினர் தமிழர்.

இலங்கைக்கு ராணுவத்தை அனுப்பும்படி மத்திய அரசைக் கோருவது மடமைத்தனம்.

அப்படிக் கூறுவதன் மூலம் சிங்கள மக்களைக் காப்பாற்றுவது என்ற பெயரில் மற்றநாடுகளில் இருந்து இலங்கை ஆயுதம் பெற உதவுவதாக இருக்கும். இப்படி அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் சொன்னர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும் கூட்டத்தில் பேசினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

BOND INSTITUTION
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
O/L
விஞ்ஞானம்
ஆசிரியர்கள்;
MR. BOND
MR. J. R. SOORI
நேர அட்டவணை: திங்கள், புதன், வெள்ளி
காலை 8.00 மணி.



# உதயன்

18 04 1986 வெள்ளிக்கிழமை



BRIGHT TUITION CENTRE
செம்பியன் லேன் - கொக்குவில்.
O/L
விஞ்ஞானம்
ஆசிரியர்: J. R. சூரி
நேர அட்டவணை: திங்கள், புதன், வெள்ளி
காலை 9 30 மணி


# மட்டக்களப்பு

# அம்பாறை பகுதியில்

# தேடுதல் தொடர்கிறது

## பலர் கைதாகினர்

மட்டக்களப்பு, ஏப்ரல் 18

மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டங்களில் இவ்வாரம் ஆயுதப்படையினர் தொடர்ந்து சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இச்சோதனைகளின் போது கைது செய்யப்படுபவர்களின் உறவினர்களிடமிருந்து மட்டக்களப்பு பிரஜைகள் குழுவிற்கு அடுத்தடுத்து புகார்கள் கிடைத்து வருகின்றன.

கடந்த 14ஆம் திகதி பாண்டிருப்பு கிராமம் சுற்றி வளைக்கப்பட்டு 16 பேர் கைது செய்யப்பட்டனர். ஒரு இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அன்றைய தினம் கல்முனையிலும் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

15ஆம்திகதி அக்கரைப்பற்று கிராமம் சுற்றி வளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. சுமார் 400 பேர் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் 200 பேர் மறுநாள் விடுதலை செய்யப்பட்டனர்.

அன்றையதினம் ஆயித்தியமலை கிராமத்திலும் 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் (புதன்கிழமை) புதுநகர் கிராமத்தில் 7 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பிரஜைகள் குழுவின் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து தெரிவித்தார்.

## அகதி முகாமுக்குள் துப்பாக்கியுடன் சென்று கலாட்டா

திருகோணமலை, ஏப். 18

முதலிக்குளம் பகுதியில் உள்ள தமிழ் அகதிகள் முகாமினுள் புகுந்து துப்பாக்கியால் தாறுமாறாகச் சுட்டுக் கலாட்டா புரிந்ததாகக் கூறப்படும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ரட்ணம் நடராசா என்ற தமிழ் அகதி செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து விஜயரட்ன டக்ளஸ் என்பவரை உப்புவெளிப் பொலிஸார் பிடித்து நேற்று திருமலை பதில் நீதிவான் திரு எம். கே. செல்வராசா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

ஏப்ரல் 16 ஆம் திகதி மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

சந்தேக நபர் துப்பாக்கியுடன் அகதி முகாமிற்குள் புகுந்து தமிழரை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கூறி துப்பாக்கியால் சுடத்தொடங்கினாராம்.

அகதிகள், குழந்தைகள், பெண்கள் உட்பட அனைவரும் ஓடிப் பதுங்கி உயிர் தப்பினர்.

சந்தேக நபரின் மனைவி அந்த இடத்துக்கு வந்து துப்பாக்கியைப் பறித்த பின்னரே அவரின் ஆவேசம் அடங்கியதாம்.

ஏப்ரல் 28 வரை விளக்க மறியலில் சந்தேக நபரை வைக்கும்படி பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

## காயமடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஏப். 18

நேற்று யாழ்நகரில் நடந்த சம்பவங்களில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:

1. சம்சுதீன் சாகுல் ஹமீது (62 வயது) யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதியைச் சேர்ந்தவர்.

2 தம்பையா சிவக்கொழுந்து (60 வயது) ஊறணி வாசி. யாழ் 'அசோக்' ஹோட்டலில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருபவர்.

3 செபஸ்தியன் ரேமன் (வயது 40) யாழ் பொலிஸ் நிலைய சிற்றூழியரான இவர் கடமையில் இருந்த சமயம் துப்பாக்கிக் குண்டு இவரது கன்னத்தைத் துளைத்தது

4 அன்ரன் ருயிலின் (16 வயது) இவருக்குத் தலையில் காயம்.

காயமடைந்த வேறு சிலர் தனியார் வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## புத்தாண்டு விருந்தில் சிப்பாய்கள் மோதல்

திருகோணமலை, ஏப் 18

புத்தாண்டில் சிப்பாய்கள் கலந்து கொண்ட விருந்து ஒன்றில் சிப்பாய்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டனர்.

இதில் 4 சிப்பாய்கள் காயமடைந்தனர் ஒரு சிப்பாய் படுகாயத்துக்குள்ளானார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 3 சிப்பாய்களை பொலிஸார் கைது செய்து நேற்று திருகோணமலை பதில் நீதிவான் திரு. எம். கே. செல்வராசா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர்கள் அனைவரையும் ஏப்ரல் 30 வரை விளக்க மறியலில் வைக்கும்படி பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

சிப்பாய்கள் அனைவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்.

## போராளிகளுடன் பேச்சு நடத்த கோரிக்கை

கொழும்பு, ஏப். 18

போராளிகளுடன் மீண்டும் பேச்சுக்களைத் தொடங்கும்படி அரசாங்கத்துக்கு இலங்கை சுதந்திரக் கட்சி ஆதரவாளர்... [illegible] தோலிக்க ஆயர் மாநாடு வேண்டுகோள் விடுத்துள்ளது.

போராளிகளும் வன் செயல்களில் ஈடுபடுவதை விடுத்து பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண வேண்டும் என்றும் மாநாடு கோரியுள்ளது.

## விண்வெளி ஆண்டு நிறைவு

லண்டன், ஏப். 16.

முதலாவது மனித விண்வெளிப் பயணத்தின் 25 ஆவது வருட நிறைவு தினத்தை ரஷ்யா கொண்டாடுகிறது.

## கண்காணிப்புக் குழு சிறிமாவும் கேட்கிறார்

கொழும்பு, ஏப். 18

இலங்கையில் தேர்தலை மேற்பார்வையிட கண்காணிப்புக் குழு ஒன்றை அனுப்புங்கள்.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, சர்வதேச ஜூரர்கள் சபைக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் கேட்டுள்ளார்.

ஏப்ரல் 17 இல் நடைபெற்ற அக்மீமன இடைத் தேர்தலை மேற்பார்வையிடவும் கண்காணிப்புக் குழு ஒன்றை அனுப்பும்படியும் திருமதி பண்டாரநாயக்கா சர்வதேச ஜூரர் சபைக்கு வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

## இன்று விசேட தொழுகை

மட்டக்களப்பு, ஏப் 18

லிபிய நாட்டின் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் பாதிக்கப்பட்டுள்ள லிபிய மக்களுக்காகக் காத்தான்குடி ஜும்மா பள்ளிவாசலில் இன்று விசேட தொழுகை நடைபெறும்.

## இந்து ஆலயங்களுக்கு அழிவு; அப்படியிருக்க உங்களுக்கு ஏன் அமைச்சர் பதவி?

### இராசதுரையிடம் கேள்வி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

இந்து ஆலயங்களுக்கு அழிவு ஏற்பட்டு வரும் இத்தருணத்தில் அதில் பங்கு கொள்ளும் விதத்தில் தமிழர் ஒருவர் தொடர்ந்தும் அமைச்சராக இருப்பதை தமிழர்கள் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளனர்.

இப்படி வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு, இந்து விவகார அமைச்சர் திரு. செ இராசதுரைக்கு அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

நீங்கள் அமைச்சராக இருக்கும் அரசாங்கத்தின் ஆயுதப்படைகள் இந்து ஆலயங்களை அழிப்பதிலும் மாசுபடுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது துக்ககரமானது.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் சம்பந்தமாக உங்களுக்கு முறையிடப்பட்ட பின்னர் நிலைமை மோசமடைந்துவிட்டது.

அதன் பின்னர் 5 லட்சம் ரூபா பெறுமதியான மணி, மணிக்கோபுரம் ஆகியன ஆயுதப்படையினரின் தாக்குதலில் பலத்த சேதமடைந்தன.

இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. அடுத்து என்ன செய்வது என்பது தெரியாமல் உள்ளோம்.

இப்படி வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழு அமைச்சருக்குக் கூறியுள்ளது.

## வீரவணக்கம்

சென்னை. ஏப். 17

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வீரமரணம் அடைந்த மூன்று போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தியிருக்கிறது.

இது தொடர்பாக புலிகள் இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

புதன்கிழமை மன்று பருத்தித்துறை இராணுவ கூட்டுமுகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எமது இயக்க வீரர் புலி (எஸ். இரவீந்திரராஜ்-பருத்தித்துறை) என்பவர் வீரமரணமடைந்தார்.

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து இன அழிப்பிற்காக இராணுவத்தினர் புறப்பட்ட சமயம் எமது தாயகத்தின் தளப் பிராந்தியத்திற்கான நேரடியுத்தத்தில் தேற்றுமாலை முரளி (என். கமலநாதன், நுணாவில் மேற்கு சாவகச்சேரி) என்ற எமது வீரரும் —

லெப்டினன்ட் ஜெரி (சு. யோகராசா, கிராம்புவில் சாவகச்சேரி) என்ற வீரரும் வீரமரணமடைந்தனர்.

அவர்களுக்கு எமது வீரவணக்கம்

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

## வடமுனைச் சடலங்கள்

மட்டக்களப்பு, ஏப்ரல் 18

கடந்த புதன்கிழமை பொலநறுவை வைத்தியசாலையில் ஆயுத படையினரால் ஒப்படைத்த சடலங்கள் சம்பந்தமாக மட்டக்களப்பு பிரஜைகள் குழு செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து ஆயுதபடை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

வடமுனை மிகவும் பின்தங்கிய பகுதி என்பதால் இச்சடலங்கள் தொடர்பாக எவ்வித புகார்களும் உடனடியாக உறவினர்களிடமிருந்து கிடைக்கவில்லை. இரண்டு, மூன்று நாட்களுக்குப் பின்புதான் புகார்கள் ஏதாவது கிடைக்குமென்று அவர் தெரிவித்தார்.

வடமுனை குடியேற்றம் மட்டக்களப்பு பொலநறுவை மாவட்ட எல்லையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## விளக்க மறியலில்

முதலிக்குளத்தில் 28-8-85 இல் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் முருகேசு செல்வராசா என்பவரின் மரணம் தொடர்பாக பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஏப்ரல் 28 வரை சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்கும்படி பதில் நீதிவான் திரு. எம். கே. செல்வராசா உத்தரவிட்டார்.

## சம்பந்தனின் சகோதரர் விடுவிப்பு

திருகோணமலை முன்னாள் எம்.பி. திரு. இரா. சம்பந்தனின் தம்பியான திரு இரா. மகேந்திரன் விடுதலை செய்யப்பட்டார்.

ஏப்ரல் 12 ஆம் திகதி தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 1984இல் இவர் கைது செய்யப்பட்டார்.

திரு சம்பந்தனின் இன்னொரு தம்பியான திருமலை முன்னாள் நகரசபைத் தலைவர் திரு. இரா. விக்னேஸ்வரனும் இவருடன் கைதுசெய்யப்பட்டார். விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்ட அவரின்மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது அவ்வழக்கு ஏப்ரல் 21 ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது.

## நாவற்குழி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர். பலர் காயமடைந்தனர். போராளி ஒருவர் உயிரிழந்தார்.

கைதடி ஜெபவீட்டில் வசித்து வந்த அலெக்சாண்டர் அருட்பிரகாசம் (வயது 23) என்பவர் கொல்லப்பட்டார்.

கன்னியாவைச் சேர்ந்த இவர் சென்ற இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு அகதியாக வந்து கைதடி ஜெபவீட்டில் வசித்து வந்தார். இவருக்கு 5 சகோதரிகளும் 2 சகோதரர்களும் இருக்கின்றனர். ஒரு சகோதரர் இறந்து 6 மாதங்களே ஆகின்றன அண்மையில் தான் ஒரு நிறுவனத்தில் தொழிலாளியாகச் சேர்ந்து கொண்டார்

ஹெலிக்கொப்டரிலிருந்து தீர்க்கப்பட்ட குண்டுகளுக்கு இவர் இரையானார்

கைதடி கிழக்கைச் சேர்ந்த கந்தசாமி தவசீலன் (6 வயது) என்ற சிறுவன் வீட்டினுள் தாயுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார். இந்தச் சிறுவனுக்கு கழுத்தில் காயமேற்பட்டது

இறுவனின் தாயாரான கந்தசாமி கனகமணி (வயது 22) காலில் காயமேற்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் வீட்டு வேலியில் வீழ்ந்த ஷெல் வெடித்துச் சிதறியதாலேயே இச் சம்பவங்கள் ஏற்பட்டன. இவர்களது வீட்டுக் கூரை, வீட்டுச் சுவர் என்பனவும் சேதமாகியுள்ளன.

கைதடியைச் சேர்ந்த எல். தரன் (21 வயது) என்பவர் கையில் காயமேற்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

காயமடைந்த வேறு சிலர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

ஷெல். குண்டுத் தாக்குதல்களினால் கைதடி சைவ அநாதை இல்லத்திற்கு முன்பாக உள்ள வீதியில் குழிகள் ஏற்பட்டுள்ளன. ஏனைய பல பகுதிகளில் மரக் கிளைகள் வீழ்ந்துள்ளன. வீடுகளின் யன்னல் கண்ணாடிகள் உடைந்துள்ளன

இந்த வேளை புதன் இரவு 9.00 மணியளவில் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் புறப்பட்ட போது போராளிகள் அவர்களை எதிர்கொண்டனர்.

இரு பகுதியினருக்குமிடையே சுமார் 45 நிமிட நேரம் நேரடி மோதல் நிகழ்ந்தது

இந்தத் தாக்குதல்களில் போராளி ஒருவர் உயிரிழந்தார்.

படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதம் பற்றிய விவரம் ஏதும் தெரியவில்லை.

## இன்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கண்டிக்குமுகமாக ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரப்பட்டிருக்கிறது.

கொட்டடி நகர் பகுதியில் நடந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்படாததும் ஹர்த்தால் ஏற்பாட்டுக்கு ஒரு காரணமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது

## வருடாந்த பொதுக்கூட்டம்

நல்லூர், ஏப் 18

கோண்டாவில் ஞானவீரசிங்க சனசமூக நிலையத்தின் 42-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை சிறுவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

திரு க. ம. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு விசேட பேச்சாளராக கோண்டாவில் அதிகார மளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. சீ யோகரத்தினமும், திரு. கே. ஜெயபராசாவும் கலந்து கொள்வர்.

## போலித் தலைமைக்கு ஒரு பாடமாகட்டும்

### அமெரிக்க தாக்குதல் பற்றி ஈரோஸ்

லிபியா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் தொடர்பாக ஈரோஸ் இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

சுதந்திரமான தன்னுரிமை இறைமைமிக்க லிபிய நாட்டின் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது மிலேச்சத்தனமான தாக்குதல் தொடுத்திருப்பது பலமாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

அரபுத் தேசியவாதத்தின் அடிநாதமாய் இருக்கும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திலிருந்து அனைத்து அரபு இஸ்லாமிய எழுச்சிகளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஒரு சவாலாகவே கடந்த காலங்களில் இருந்து வந்திருக்கின்றன.

இந்த வகையில் ஏகாதிபத்திய எதிர்ப்பில் லிபியாவும் அதன் தலைவர் கேர்ணல் கடாபியும் உறுதியாக இருந்தமையே அண்மைய தாக்குதலுக்கான காரணம் என்பது அனைவரும் அறிந்தது.

லிபியாவின் மீதும் அதன் தலைவர் மீதும் மிலேச்சத்தனமாகத் தொடுக்கப்பட்ட இத் தாக்குதலைக் கண்டித்து உலகெங்குமுள்ள நடுநிலை நாடுகளும் நியாய விரும்பிகளும் குரல் எழுப்பியுள்ளனர்.

ஆனால் அமெரிக்க,இஸ்ரேலிய கூட்டாளியான சிறிலங்கா அரசு தன் பங்கிற்கு மௌனம் சாதிக்கிறது சிறிலங்காவின் அனைத்து இஸ்லாமிய மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாய் மார்தட்டிக்கொள்ளும் போலித் தலைமைகள் இச்சம்பவங்களை விட்டு வாய்மூடி மௌனிகளாகிப் போயுள்ளனர்.

இந்த நிலையில் ஈழப் பிரதேசங்களில் வாழும் இஸ்லாமியர்களின் உள்ளுணர்வுகளைப் பிரதிபலிக்கும் விதத்தில்—குறிப்பாக யாழ் இஸ்லாமிய பொதுமக்களும்—முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்கள், தமிழ் பேசும் மக்கள் ஆகியோரும் எடுத்த நடவடிக்கைகள் போலித் தலைமைகளுக்கு ஒரு பாடமாக அமையட்டும்.

## அமெரிக்கா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் அனுப்பி வைக்கப்பட்டன.

மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:–

ஜப்பானில் ஹிரோஷிமா, நகசாகி நகரங்களில் இடம்பெற்ற அணுக்குண்டு வீச்சுத் தாக்குதலின் பின்னர் இடம்பெற்ற அமெரிக்காவின் மிக மோசமான மனித குலவிரோத நடவடிக்கை கடந்த தினங்கள் இடம்பெற்ற லிபியா மீதான தாக்குதல் ஆகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காட்டுமிராண்டித்தனத்தை பிரித்தானிய அரசு ஆதரித்து விமானத்தள வசதியும் அளித்துள்ளது.

இந்த மனுக்குல விரோதிகளின் சர்வதேச பயங்கரவாத நடவடிக்கையைக் கண்டித்து யாழ் மாவட்ட முஸ்லிம்கள் நடத்திய ஹர்த்தாலில் யாழ் மாவட்ட மக்கள் அனைவரும் பங்குபற்றினர்.

உலக ஜனநாயகத்தின் பாதுகாவலன் என்று காட்டிக்கொள்ளும் அமெரிக்கா, முஸ்லிம் நாடுகளை அடிபணிய வைக்கும் ஆக்கிரமிப்பு முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இது சம்பந்தமாக இலங்கை முஸ்லிம்களின் மனக்கொதிப்பை இலங்கை அரசு இதுவரையும் வெளிப்படுத்தவில்லை. இது எமக்கு அதிர்ச்சி தருகிறது.

அமெரிக்காவினதும் பிரிட்டனதும் ஏகாதிபத்திய பயங்கரவாதத்தைக் கண்டிக்கும் இலங்கை முஸ்லிம்களின் உள்ளத்து உணர்வுகளை இலங்கை அரசு பிரதிபலிக்க வேண்டும்.

இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## மாகாண...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் யூனியன் பிரதேசத்துக்கு உள்ள சட்டவிதி, இலங்கையிலும் அமுல் நடத்தப்படும்

அதன்படி மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விஷயங்கள் குறித்து நாடாளுமன்றமும் சட்டங்களை நிறைவேற்ற முடியும்

இவைகளைக் கொண்டதாக அரசின் புதிய யோசனைகள் உள்ளதாம்

## பேரணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகஜரை ஏற்றுக் கொண்ட அரச அதிபர் அதனை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார்.

யாழ் முஸ்லிம் மக்களும் இஸ்லாமிய இளைஞர் அமைப்பும் ஒழுங்கு செய்த இந்தப் பேரணியின் இறுதியில் அமெரிக்காவின் தேசியக் கொடியும் யாழ் செயலகத்தின் முன்பாக உள்ள வீதியில் போட்டுத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது

முஸ்லிம் அமைச்சர்கள் எம். பிக்கள் ஆகியோரைக் கண்டிக்கும் வாசகங்கள் விலகலோக அட்டைகளும் நேற்றைய பேரணியில் இடம்பெற்றன

## யாழ் நகரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை

இரவு 7 மணிக்குப்பின்னரும் நகரில் விட்டுவிட்டு துப்பாக்கி வேட்டு,குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டவண்ணமாக இருந்தது.

நேற்றைய சம்பவம் குறித்து அறியவந்ததாவது:

பேரணிநடந்தபோதும் அதற்குப் பின்னரும் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன

அதைத் தொடர்ந்து நண்பகல் சுமார் 12 மணியளவில் இராணுவத்தினர் கோட்டை முகாமிலிருந்து வெளியே வந்தனர்.

யாழ் முனியப்பர் ஆலயம், சுப்பிரமணியம் பூங்கா, தபால் கந்தோர் (அருகாமை) ஆகிய பகுதிகளில் நின்ற இராணுவத்தினர் குண்டுகள் வெடித்த இடங்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதையடுத்து போராளிகளும் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். மோட்டார் ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர்.

சுமார் இரண்டு மணி நேரமாக இரு சாராரும் மோதிக்கொண்டனர்.

சிறுடையினர் முகாமுக்குத் திரும்பிய பின்னர் 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் குருநகர், மணிக்கூட்டுக் கோபுரம் ஆகியபகுதிகளில் 'ஷெல்'கள் விழுந்து வெடித்தன.

நண்பகல் சுமார் ஒரு மணியளவில் ஹெலிக்கொப்டர்விமானம் ஒன்று தாழப்பறந்து பண்ணைப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

போராளிகளும் விமானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம்செய்தனர்.

பண்ணைவீதியால்வந்து கொண்டிருந்த தனியார் வான் ஒன்றும் துப்பாக்கி வேட்டுக்களுக்கு இலக்காகியது.

இதனால் அந்த வான் பண்ணைக் கடலுக்குள் குடை சாய்ந்தது.

வானில் வந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதுபற்றி அறிவதற்காக, யாழ் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ்ஒன்று இராணுவத்தினரின் முன்அனுமதியுடன் அங்கு சென்றது ஆனால்அங்கு எவரும் இல்லாததால் அது திரும்பி வந்தது.

பண்ணைப்பக்கமாக நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக தீவுப் பகுதிக்கு செல்லவிருந்த மக்களை, மீனவர்கள் வள்ளங்கள் மூலம் மண்டை தீவுப் பகுதியில்கொண்டுபோய் இறக்கினர்.

நேற்றைய சம்பவத்தில் யாழ். தொலைத் தொடர்பு நிலையக் கண்ணாடிகள், சுவர்கள் பலத்த சேதம் அடைந்தன.

சம்பவ நேரம் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மயிரிழையில் உயிர் தப்பியதாக அறியப்படுகின்றது.

யாழ் மத்திய கல்லூரி, யாழ் நீதிமன்றம் யாழ். மாநகரசபை, பழைய வாடிவீடு, யாழ். பொதுசன நூலகம் முகாமைச் சுற்றியுள்ள வீடுகள் பலவற்றில் கண்ணாடிகள் உடைந்தும் சுவர்கள், கூரைகளில் துப்பாக்கி சன்னங்கள் பாய்ந்தும் சேதம் அடைந்தன.

ஹோட்டல் அசோக் கண்ணாடிகள் குளிர் ஊட்டும் கருவி போன்றவை துப்பாக்கிப் பிரயோகத்தில் சேதம் அடைந்தன

J. M. J.

பிறந்த நாள் வாழ்த்து



செல்வி M. S. T. ஜீன்

M. S. T. ஜீன் தனது முதலாவது பிறந்த தினத்தை குதூகலமாகக் கொண்டாடுகிறார். அவரை, கொலண்டிலிருக்கும் டாடி S. தங்கராசா, யாழ்ப்பாணத்திலிருக்கும் மம்மி, பெரிய மாமா, பெரியம்மா, ஐயா, அம்மம்மா, மாமன்மார், சித்தப்பாமார், அங்கிள்மார், அன்ரிமார் மற்றும் உறவினர் நண்பர்கள் யாவரும் வேளாங்கன்னி அருளால், ஞானம், கல்வி, செல்வம் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றனர்.

ஞானவாசா
கோப்பாய் தெற்கு
கோப்பாய்.


அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15,8 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியீட்டு திகதி 18-04-1986
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number QD/39/News/86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org